**தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டம் - 2018**

---

தெற்கு வீதி இணைப்பு செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 மே 27 ஆந் திகதிய 3027-எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. தெற்கு நெடுஞ்சாலையில் இணைக்கப்பட்ட வீதிகளின் 33 கிலோமீற்றர்களை மேம்படுத்தி புனரமைத்தல் மூலம் தேசிய போக்குவரத்து வினைத்திறனை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,248 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 95 மில்லியனென மதிப்பிடப்பட்டது, அதில் ரூபா 9,025 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 மே 27 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2018 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கள் திகதி 2019 ஜுன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கடன் வழங்கும் முகவரினால் மீளப் பெறப்பட்ட மொத்தமாக ரூபா 220.94 மில்லியன் பெறுமதியான கடன் மீதான வட்டி மற்றும் ஒப்படைப்பு கட்டணங்கள், கடன் உடன்படிக்கையின் உறுப்புரை II இன் பகுதி 2.02 மற்றும் 2.03 இன் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் வேறுவேறாக வெளிப்படுத்தியிருக்கவில்லை. | விடுபாடு | உடன்பாடு. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய அனைத்து கிரயங்களையும் கருத்தில் கொள்ள புரிந்துணர்வு செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

---

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

---

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் கொழும்பு மாவட்டத்திலுள்ள 06 தேசிய வீதிகளின் 33 கிலோமீற்றர்களினை புனரமைப்பதற்காக 04 ஒப்பந்த பொதிகளின் கீழ் அமுல்படுத்த பட்டியலிடப்பட்டிருந்தது. ஒப்பந்தப்பொதி 01 இன் கீழ் அமுல்படுத்தப்பட்ட மொரட்டுவ - பிலியந்தல வீதி மற்றும் ரத்மலான - மிரிஹன வீதியின் 4.64 கிலோமீற்றர்களின் புனர்நிர்மான வேலைகள் 248 நாட்கள் தாமதத்துடன் 2017 ஜூன் 19 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தப்பொதி 03 இன் கீழான மதுருகொட தொடக்கம் தெற்கு அதிவேகப்பாதையுடன் இணைக்கப்பட்ட வீதியின் 10.37 கிலோமீற்றர்களின் புனர்நிர்மான வேலைகள் 2018 நொவம்பர் 28 இல் பூர்த்தியாக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | ஒப்பந்தப்பொதி 01 இன் கீழான ரூபா 134.32 மில்லியன் பெறுமதியான அளவைப்பட்டியலின் 235 உருப்படிகளின் கீழான வேலைகள் மற்றும் ஒப்பந்தப்பொதி 03 இன் கீழான ரூபா 189 மில்லியன் பெறுமதியான அளவைப்பட்டியலின் 260 உருப்படிகளின் கீழான வேலைகள் என்பன ஒப்பந்ததாரரினால் கவனிக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதனால் ஒப்பந்தப் பொதிகளின் பொரியியலாளரின் மதிப்பீடுகள் ரூபா 61.72 மில்லியன் பெறுமதியான செய்யப்படாத வேலைகளிற்காக வேலை ஆரம்பிப்பு முற்பணங்களை பெற்றுக்கொள்வதன் மீது ஒப்பந்ததாரரிற்கு மேலதிக நன்மைகளை அனுமதிப்பதனூடாக சரியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அது வெளிப்படுத்தியது. | மந்தகதியான ஒப்பந்த நிர்வாகம் காரணமாக ஒப்பந்தக்கிரயம் அதிகரிப்பதற்கும் நிதிகளின் விரயத்திற்கும் சாத்தியம். | மதிப்பீடுகள் திட்டமிடல் கட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. தற்போதய உண்மை மதிப்பீடு நிர்மான பகுதியிலுள்ள நிழக்கீழ் மற்றும் ஏனைய பகுதியினை முறையான புலனாய்வு செய்யாமல் தயாரிப்பது சாத்தியமில்லை. எனவே, சில உருப்படிகள் எதிர்வு கூறப்பட வேண்டியதுடன் சில உருப்படிகள் நிர்மான கட்டத்தில் தேவைப்படாமல் இருக்கலாம். | நிழக்கீழ் அளவை வேலைகள் மற்றும் ஏனைய விசாரனைகள் உள்ளடங்களாக விபரமான பொறியியள் கற்கைகள், மதிப்பீடுகள் மற்றும் தேவைகளின் வேலைப்பரப்பினை தயாரிப்பதற்கு முன்னர் செய்யப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2019 மே 16 இல் பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்த ஒப்பந்தப் பொதி - 02 இன் கீழான கிருலப்பன - ஹோமாகம வீதி மற்றும் கெஸ்பவே - பொகுனுவிட்ட வீதியின் 16.18 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தம் ஆரம்ப வேலைப்பரப்பில் மேலதிக வேலைகள் சேர்க்கப்பட்டதன் காரணமாக 2019 நொவம்பர் 17 வரை நீடிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலாக, அம்பத்தல தொடக்கம் சினேக் சந்தி வரையான வீதியின் 1.8 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகள் அடுத்தடுத்த வேலைப்பரப்பு மாற்றங்கள் காரணமாக 274 நாட்கள் தாமதத்துடன் கூட 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | நேர அதிகரிப்பு மற்றும் மேலதிக வேலைகள் காரணமாக கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஒப்பந்தப்பொதி - 02 ன் கீழான வேலைகள் கனிசமான அளவு பூர்த்தியடைந்திருந்ததுடன் ஒப்பந்தப்பொதி - 04 அன் கீழான வேலைகள் மீதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. | தாமதங்களை குறைப்பதற்கும் சாத்தியமான மேலதிக கிரயங்களை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |